**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்**

**முன்னிலை : திரு. S. ஜவகர், B.L.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2022-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 4-ஆம் நாள் சனிக் கிழமை**

**அசல் வழக்கு எண். 55/2006-ல்**

**வழக்கிடை மனு எண்.119/2023**

1. ஜி.சரோஜா
2. ஜி.சிவஞானம்
3. ஜே.லீலாவதி
4. பிரேமாவதி .. மனுதாரர்கள்/ 13, 14, 17 மற்றும் 18 பிரதிவாதிகள்

/எதிராக/

ஸ்ரீ ராகவம்மாள் அறக்கட்டளை

அதன் பரம்பரை அறங்காவலர்கள்

1. ஏகாஜம்பர குருக்கள் ( இறந்துவிட்டார்)
2. முத்துகுமாரசாமி குருக்கள்
3. ஞானசேகரன் (எ) சேகர் குருக்கள் .. எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பு 16.02.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ். ராமதாஸ் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.வேலு அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

## உத்தரவு

மனுதாரரின் சாட்சியத்தை அவரது வீட்டில் வைத்து பதிவு செய்ய வழக்கறிஞர்/ ஆணையர் ஒருவரை நியமிக்க உத்தரவிடக்கோரி, மனுதாரர் உ.வி.மு.ச. கட்டளை-26 விதி 1 மற்றும் 4(எ) உடன் இணைந்த பிரிவு 151-ன் கீழ் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

<u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u> :

2. மனுதாரர் இம்மனுவில் 2-ஆம் மனுதாரர் மற்றும் மேற்படி அசல் வழக்கில் 14-ஆம் பிரதிவாதி ஆவார். இம்மனுவில் 1-வது மனுதாரர் இம்மனுதாரரின் தாயார். 3,4 மனுதாரர்கள், இம்மனுதாரரின் சகோதரிகள். மேற்படி மனுதாரர்களுக்காகவும் இம்மனுதாரர் வழக்கை நடத்தி வருகிறார். எதிர்மனுதாரர்கள், விளம்புகை மற்றும் சுவாதீனம் ஒப்படைப்பு பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்தள்ளனர். மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் எதிர்கட்சி செய்து வழக்கை நடத்தி வருகின்றனர். இம்மனுதாரர், தமிழ்நாடு அரசு வனத்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஊழியர் ஆவார். இம்மனுதாரருக்கு தற்போத 73 வயதாகிறது. இம்மனுதாரர் அவருடைய கண்பார்வையை கடந்த 10 வருடங்களாக முற்றிலுமாக இழந்துவிட்டார். இம்மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரிகளான 1,3,4 மனுதாரர்கள் மனுதாரரைவிட வயதுமுதியவர்கள் ஆவர். எனவே, அவர்களால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியாது. எனவே, இம்மனுதாரரின் சாட்சியத்தை, மனுதாரரின் வீட்டில் வைத்து, இருதரப்பினர்களின் வழக்கறிஞர்கள் முன்னிலையில் பதிவு செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, மனுதாரரின் சாட்சியத்தை அவரது வீட்டில் வைத்து இருதரப்பினர்களின் வழக்கறிஞர்கள் முன்னிலையில் பதிவு செய்ய வழக்கறிஞர்/ஆணையரை நியமிக்க வேண்டும். இல்லையேல் மனுதாரருக்கு ஈடுசெய்யமுடியாத நஷ்டமும், கஷ்டமும் ஏற்பட்டுவிடும்.

எனவே, மனுப்படி உத்தரவாக வேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

3. **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>** :

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 26 விதி 4 மற்றும் 4 எ-ன் கீழான மனுவானது சட்டப்படிக்கும் பொருண்மை படிக்கும் செல்லத்தக்கதல்ல. ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யத்தக்கது. மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காததற்கு அவருடைய வயது முதிர்வினையும், கண்பார்வையில்லாததையும் காரணமாக கூறியுள்ளார். மேற்சொன்ன காரணங்கள் செல்லத்தக்க காரணங்கள் அல்ல. மனுதாரர்கள் அவர்களுடைய வழக்கறிஞரின் அலுவலத்திற்கு சென்று மனுவினை தாக்கல் செய்ய அறிவுறுத்த மனுதாரர்களுக்கு முடியும்போது, நீதிமன்றத்திலும் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியும். நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியாததற்கு வயது முதிர்வினை காரணம் காட்ட முடியாது. அரிதான பரிகாரங்களில் மற்றும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தான், வழக்கறிஞர் ஆணையரை நியமித்து, ஆணையர், அவர்களது வீட்டிற்கு சென்று சாட்சிகளை பதிவு செய்ய அனுமதி வழங்க முடியும். இம்மனுவானது சட்டத்திற்கு முரணானதாகும். மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது தகுதியற்றது. திறந்த நீதிமன்றத்தில் சாட்சி விசாரிப்பதை ஏன் பின்பற்றப்படுகிறது என்றால், மனுதாரர் சாட்சியம் அளிக்கும்போது அவருடைய அனைத்து நடவடிக்கைகளையும் நீதிமன்றம் கவனிக்க முடியும். மனுதாரர்கள் சாட்சியங்களை முன்வைப்பதற்காக திறந்த நீதிமன்றத்திற்கு வருவதைத் தவிர்ப்பது அவர்களின் தரப்பில் நியாயமற்ற தன்மையைக் காட்டுகிறது. திறந்த நீதிமன்றத்தில் ஆஜராவதும், சாட்சியம் அளிப்பதும் நியாயமான விசாரணையின் இன்றியமையாத அம்சமாகும், மேலும் மனுதாரர் திறந்த நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்க சட்டத்தின்

செயல்முறையை தவறாகப் பயன்படுத்த முடியாது மற்றும் துஷ்பிரயோகம் செய்ய முடியாது, இது மனுதாரருக்கு மட்டுமே நன்மை பயக்கும். நியாயமான தீர்ப்பின் எந்த தரத்தின்படியும், சாட்சியங்களை பதிவு செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமிப்பது நியாயமற்றது மற்றும் நியாயப்படுத்த முடியாதது. மனுதாரர் வழக்கின் நடவடிக்கையை தாமதப்படுத்தவே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

4. **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்** :

மனுதாரர்கள் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**பிரச்சனை**:

5. இந்த மனுவில் மனுதாரர், இம்மனுவில் 2-ஆம் மனுதாரர் மற்றும் மேற்படி அசல் வழக்கில் 14-ஆம் பிரதிவாதி என்றும், இம்மனுவில் 1-வது மனுதாரர் இம்மனுதாரரின் தாயார் மற்றும் 3,4 மனுதாரர்கள், இம்மனுதாரரின் சகோதரிகள் என்றும், மேற்படி மனுதாரர்களுக்காகவும் இம்மனுதாரர் வழக்கை நடத்தி வருவதாகவும், எதிர்மனுதாரர்கள், விளம்புகை மற்றும் சுவாதீனம் ஒப்படைப்பு பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்தள்ளனர் என்றும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் எதிர்கட்சி செய்து வழக்கை நடத்தி வருவதாகவும், இம்மனுதாரருக்கு தற்போத 73 வயதாகிறது என்றும், அவருடைய கண்பார்வையை கடந்த 10 வருடங்களாக முற்றிலுமாக இழந்துவிட்டதாகவும், இம்மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரிகளான 1,3,4 மனுதாரர்கள், இம்மனுதாரரைவிட வயதுமுதியவர்கள் என்றும், எனவே, அவர்களால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியாது என்றும், எனவே, இம்மனுதாரரின் சாட்சியத்தை, மனுதாரரின் வீட்டில்

வைத்து, இருதரப்பினர்களின் வழக்கறிஞர்கள் முன்னிலையில் பதிவு செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் இல்லையேல் மனுதாரருக்கு ஈடுசெய்யமுடியாத நஷ்டமும், கஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் கூறப்பட்டள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுச் சங்கதிகளுக்கு கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மேற்படி அசல் வழக்கானது 2006-ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருகின்றது. 14-ஆம் பிரதிவாதியான இம்மனுதாரர், இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது முற்றிலும் கண்பார்வையற்று, வயோதிகத்தின் காரணமாக முடியாமல் அவர் இருந்ததை இந்நீதிமன்றம் கவனித்தது. இம்மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்திருந்தபோதிலும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை மற்றும் மனுதாரரின் கண்பார்வையற்ற வயது முதிர்வினையும் கருத்தில் கொண்டு, மனுதாரரை அவரது வீட்டில் வைத்து மனுதாரரின் சாட்சியத்தை பதிவு செய்ய வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமிக்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும், நீதியின் நலனுக்காகவும் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதி, இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என்று தீர்மானித்து, இவ்வாறாக இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

7. முடிவாக, இம்மனுவை அனுமதித்து, வழக்கறிஞர் திரு.கே.கோடீஸ்வரன் அவர்களை ஆணையராக நியமிக்கப்பட்டு, அவருடைய ஊதியம் ரூ.7000/-என நிர்ணயிக்கப்பட்டும், மனுதாரர்கள், வழக்கறிஞர்/ஆணையரின் ஊதியத்தை வரும் 10.03.2023 ந்தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், வழக்கறிஞர்/ஆணையர், உவிமுச.கட்டளை-26, விதி 1 மற்றும் 4(எ)-ன்படி, மனுதாரர்கள் வீட்டில் வைத்து

மனுதாரர்களின் சாட்சியத்தை பதிவு செய்ய இருப்பது குறித்து, இருதரப்பினர்களுக்கும், இருதரப்பு வழக்கறிஞர்களுக்கும் அறிவிப்பு கொடுத்து, இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில், மனுதாரர்களை அவர்களது வீட்டில் வைத்து விசாரணை செய்து, மனுதாரர்கள் அளிக்கும் முதன்மை சாட்சியத்தையும், குறுக்குவிசாரணை சாட்சியத்தையும் இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் கணினி அல்லது மடிக் கணினி ஆகிய ஏதேனும் ஒன்றில் தட்டச்சு செய்து, அதனை தாளில் அச்செடுத்து (Printout), இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் படித்துக்காட்டி, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் முதன்மை சாட்சியம் மற்றும் குறுக்குவிசாரணை சாட்சியம் ஆகியவற்றை, இருதரப்பு வழக்கறிஞர்கள் கொடுக்கும் Pendrive-களில் பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்றும், இந்நீதிமன்றத்திலும் தனிப்பட்ட Pendrive-ல் பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்றும், ஒருவேளை, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய காலஅவாகசம் கோரப்படுமாயின், முதன்மை விசாரணை செய்யப்பட்ட நாளிலிருந்து 2 நாட்களுக்கு மட்டுமே கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

வழக்கறிஞர்/ஆணையர், அச்செடுக்கப்பட்ட மற்றும் Pendrive-ல் பதிவு செய்யப்பட்ட மனுதாரர்களின் முதன்மை சாட்சியம் மற்றும் குறுக்குவிசாரணை சாட்சியம் ஆகியவற்றை தாக்கல் செய்ய வாய்தா :20.03.2023.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 4-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.03.06 18:27:26 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**<u>இணைப்பு</u>** :

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.03.06 18:27:35 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.